

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, திமுக தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவருமான பூச்சி எஸ்.முருகன் நேற்று (28.7.24) தி.நகர், தர்மாபுரம் பகுதியைச் சேர்ந்த சுமார் 1500 பேருக்கு மதிய உணவு வழங்கினார். வட்ட கழக செயலாளர்கள் தவமணி, விஷ்ணு, முன்னாள் வட்ட செயலாளர் வெங்கடேசன் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் உடன் இருந்தனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்!

# இதுதான் முதலமைச்சரை நடத்தும் முறையா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

சென்னை, ஜூலை 29-

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதுடெல்லியில் நேற்று நிதி ஆயோக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த 9 முதலமைச்சர்கள் புறக்கணித்த நிலையில் இக்கூட்டத்தில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி பங்கேற்றார். இந்தக் கூட்டத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி பேசுவதற்கு வெறும் ஐந்து நிமிடங்களே ஒதுக்கி அதற்குள் பேச்சை முடித்துக் கொள்ளுமாறு நெருக்கடி கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் மம்தா பானர்ஜி, ஒன்றிய அரசின் பாரபட்சத்தை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது எனக்கூறி இந்தக் கூட்டத்திலிருந்து கோபாவேசமாக வெளியேறினார்.

மேற்கு வங்க முதலமைச்சருக்கு நேர்ந்த இந்தச் செயலை கண்டித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதுதான் கூட்டுறவு கூட்டாட்சியா? எனவும் இதுதான் ஒரு முதலமைச்சரை நடத்தும் முறையா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.7.2024) வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**இதுதான் கூட்டுறவுக் கூட்டாட்சியா?**

**இதுதான் ஒரு முதலமைச்சரை நடத்தும் முறையா?**

**எதிர்க்கட்சிகள் என்பவை மக்களாட்சியின் இன்றியமையாத அங்கம் என்றும், அவர்கள் குரல் ஒடுக்கப்பட வேண்டிய எதிரிகள் அல்ல என்றும் ஒன்றிய பா.ஜ.க அரசு உணர்ந்துகொள்ள வேண்டும்.**

**கூட்டுறவுக் கூட்டாட்சியியலுக்கு திறந்த மனதுடனான பேச்சுவார்த்தையும், அனைத்துத் தரப்புக் குரல்களுக்கும் மரியாதையும் அவசியமானவை ஆகும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



நிதிநிலைஅறிக்கையில்தமிழ்நாட்டைபுறக்கணித்தஒன்றியபாசிபா.ஜ.க.அரசைக்கண்டித்துமாவட்டசெயலாளர்கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்புதுக்கோட்டையில்கண்டனஆர்ப்பாட்டம்நடைபெற்றது.இதில்5ஆயிரம்கழகத்தினர்கலந்துகொண்டுகண்டனமுழக்கமிட்டனர். முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் கண்டன உரையாற்றினார். கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. – த.சந்திரசேகரன் பங்கேற்றனர்.

### தென்மேற்கு பருவமழையால் நீர்வரத்து 14,127 கன அடியாக அதிகரிப்பு!

# முழு கொள்ளளவை எட்டிய பவானிசாகர் அணை!

சத்தியமங்கலம்,ஜூலை 28 –

நீர்ப்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால், பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 14,127 கன அடியாக அதிகரித்துள்ளதால் முழு கொள்ளளவை எட்டியது. தமிழகத்தில் மேட்டூர் அணைக்கு அடுத்தபடியாக 2வது பெரிய அணையாக ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணை விளங்குகிறது.

இந்த அணை 105 அடி உயரமும், 32.8 டிஎம்சி கொள்ளளவும் கொண்டதாகும். பவானிசாகர் அணை மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 2 லட்சத்து 47 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மலைப்பகுதி மற்றும் வடகேரளாவில் தொடர்ச்சியாக தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக பவானிசாகர் அணைக்கு வந்து சேரும் பவானி ஆறு மற்றும் மாயாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. பவானிசாகர் அணைக்கு நேற்று நீர்வரத்து 7,465 கன அடியாக இருந்த நிலையில் இன்று காலை அணைக்கு நீர்வரத்து 14,127 கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. இன்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணை நீர்மட்டம் 87.54 அடியாகவும், நீர் இருப்பு 20 டிஎம்சி ஆகவும் உள்ளது. அணையில் இருந்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக பவானி ஆறு மற்றும் கீழ்பவானி வாய்க்காலில் 1205 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால், விரைவில் அணை முழு கொள்ளளவை எட்டியது.


